# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 210/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | அருள்குமார் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | நடராஜன் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 51 | ஜாதி | .. | கொங்குவேளாளர் |
| கிராமம் | .. | கரியானூர் | நாள் | .. | 20.09.2021 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. அருள்குமார் என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

வா.சா.1 – அருள்குமார் - முதல் விசாரணையின் தொடர்ச்சி.

1)13.08.2015 தேதியிட்ட கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய அ – பதிவேடு, உண்மை நகல், வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 13.08.2015 தேதியிட்ட கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய சான்று, அசல், வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 13.08.2015 தேதியிட்ட கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய புல வரைபடம், உண்மை நகல், வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) மின் இணைப்பு எண்.04-116-006-142-க்கான மின் கட்டண வெள்ளை அட்டை, அசல், வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 06.07.2015 தேதியிட்ட முதலாம் வாதி பெயரிலான மின்கட்டண ரசீது, அசல், வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் உண்மைநகல் என்பதால் குறியீடு செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதி விசாரணையில் முடிவு செய்யப்படும்.

வாதிகள்தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 இன் முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / அருள்குமார்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.